DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.55/2025**

**P.W.5**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | G.ராஜேந்திரன் |
| Father Name | : | குருசாமி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2026.
( எதிரி ஆஜர். )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை தாலுகா, பாலவநத்தம் வடக்குபட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சமயம் நான் கள்ளிக்குடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 04.04.2017ம் தேதி திருமங்கலம் தாலுகா தூம்பக்குளத்தை சேர்ந்த காத்தவராயன் மகன் பிரபாகரன் என்பவர் கொடுத்த புகாரை பெற்று காவல்நிலைய குற்ற எண்.91/2017 பிரிவுகள் 294(b), 323, 506(ii), 3(1) of TNPPDL Actன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகாரையும் திருமங்கலம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், மேலும் சம்மந்தப்பட்ட நகலை மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். மேற்படி புகார் மனு **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கை அப்போது காவல்நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த காவல் ஆய்வாளர் சாட்சி எண்.8 ரவி அவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளான சாட்சி எண்.5 ஜேம்ஸ், சாட்சி எண்.6 சிதம்பரம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ

இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 வரை மற்றம் சாட்சி எண்.5 மற்றும் சாட்சி எண்.6 ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii), 3(1) of TNPPDL Actன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு பதிவு செய்யவில்லை என்றும், நான் சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், நான் சொன்ன நேரத்தில் எதிரி கைது செய்யப்பட்டு, எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், இந்த வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்றவாறு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு, முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.09 16:46:44 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.